**<u>செய்தி வெளியீடு எண்.584</u>** **<u>நாள்.18.07.2008</u>**

## குடிமைப்பொருள் குற்றப் புலனாய்வுத் துறையின் செயல்பாடுகள் குறித்து உணவுத் துறைஅமைச்சர் எ.வ.வேலு அவர்கள் மாநில அளவிலான ஆய்வு

*********

குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்களின் செயல்பாடுகள் குறித்து 18.7.2008 அன்று காலை 10.30 மணி அளவில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் அலுவலக கோபாலபுரம் கூட்ட அரங்கில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை உயர் அலுவலர்கள், அனைத்து ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள் ஆகியோர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஆய்வுக் கூட்டத்தை துவக்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் உரையாற்றுகையில், 2008 ஆம் ஆண்டில் 10,284 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது போன்ற குற்றங்களின் ஈடுபட்டு இதுவரை கைது செய்யப்படாத குற்றவாளிகளை கைது செய்ய நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார். திருவள்ளூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், தூத்துக்குடி, குழித்துறை, வேலூார் ஆகிய மாவட்டங்களில் அரிசி நுகர்வு அதிகரித்துள்ளது என்றும் இப்பகுதியில் கண்காணிப்பை தீவிரப்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டது. எல்லையோர மாவட்டங்களில் குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறையின் பணி மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்கள். மேலும் இந்த ஆண்டில் ஜனவரி முதல் ஜூன் வரையிலான ஆறு மாத காலத்தில் கைப்பற்றப்பட்ட அரிசியின் அளவும், மதிப்பும் மிக குறைந்துள்ளது. அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் பிரிவு 6(a) ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 8,391 வழக்குகள் நிலுவையிலுள்ளது. இந்த வழக்குகளை உடனடியாக தீர்வு செய்ய உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையர் மற்றும் கூடுதல் காவல் துறை இயக்குநர் ஆகியோர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கள்ளச்சந்தை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் 52 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். எந்த காரணத்தையும் கொண்டு குற்றவாளிகள் தப்பிக்க விடக்கூடாது.

மாநில அறிவுரைக் கழகத்தின் அறிவுரையின்படியும் மற்றும் உயர் நீதிமன்றத்தின் மூலமும் விடுதலையாகும் குற்றவாளிகள் மீண்டும் அரிசி கடத்தல் தொழிலை செய்கிறார்களா? என்பதை கண்காணிக்க வேண்டும்.

கள்ளச்சந்தை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் விடுதலை செய்யப்பட்டாலும், அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் அவர்கள் மீதான குற்ற வழக்குகளை தொடர்ந்து நடத்த வேண்டும். எல்லையோர மாவட்டங்களில் இரவு ரோந்துப்பணி மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறித்தினார்கள். மேலும், குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுபாட்டு அறையில் பெறப்பட்ட புகார்கள் மற்றும் அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து திருப்தி தெரிவித்தார். அரிசி கடத்தலில் ஈடுபடும் லாரிகள் மற்றும் ஓட்டுனர்களின் உரிமங்களை ரத்து செய்யப்பட வேண்டும் என்றும், இத்தகைய குற்றவாளிகளிடம் தயவு தாட்சண்யம் பார்க்கக் கூடாது என்றும் அறிவுறுத்தினார்கள். லாரி உரிமையாளர்கள், ஓட்டுனர்கள் மற்றும் கிளினர்கள் ஆகியோருடன் கூட்டம் நடத்தி அரிசி கடத்தலில் ஈடுபடும் லாரிகள் மற்றும் ஓட்டுனர்களின் உரிமம் ரத்து செய்யப்படும் என்பதை விளக்கிக் கூறும்படியும் மாவட்ட அளவில் உள்ள அரிசி கடத்தல்காரர்களின் பட்டியலை மாவட்ட ஆட்சியர்களிடம் அளித்து அரிசி கடத்தலை அடியோடு ஒழிக்க வருவாய் துறை, உணவுத் துறை அலுவலர்கள் கூட்டாக நடடிவக்கை மேற்கொள்ள வேண்டும். எல்லையோர பகுதிகளில் வாகன சோதனை செய்ய வேண்டும். இரயில் மூலம் அரிசி கடத்தலை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். பறக்கும் படையினர் அவர்களுடைய பணியினை மேலும் துரிதப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். மேலும், மாவட்ட அளவில் உள்ள குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறை அலுவலர்கள் அந்தந்த பகுதியில் தீவிர கண்காணிப்பு மேற்கொண்டு கடத்தலில் ஈடுபடும் நபர்கள் பற்றி தகவல் சேகரித்து கடும் நடவடிக்கை எடுத்து கடத்தலை முழுமையாக தடுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை செயலாளர் திரு.கே.சண்முகம், இ.ஆ.ப., குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர் திரு.விபாகர் சர்மா, இ.கா.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு.கே.ராசாராம், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் கே.பணீந்தர் ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை காவல் துறை தலைவர் திரு.ஆசிஷ் பாங்கரா, இ.கா.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**